செ.வெ.எண். 18 நாள் - 07.01.2021

## நீலகிரி மாவட்டத்தில், வருவாய்த்துறையில் 3 இரவுக்காவலர் பணியிடங்ககள் நிரப்ப விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

நீலகிரி மாவட்ட வருவாய் அலகில் காலியாகவுள்ள 3 இரவுக்காவலர் பணியிங்களை நிரப்ப, விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேற்படி பணியிடங்களுக்கு விண்ணப்பம் செய்வோர் குறைந்த பட்சம் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 01.07.2020 அன்றைய நிலையில் குறைந்தபட்ச 18 வயது பூர்த்தி ஆகியிருக்க வேண்டும். மேலும் 01.07.2020 அன்றைய நிலையில் அதிகபட்சமாக பொதுப்பிரிவினர் (**OC**) -30 வயது, பிற்படுத்தப்பட்டோர் (**BC**) மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (**MBC**) -32 வயது, ஆதிதிராவிடர் (**SC&SCA**) மற்றும் பழங்குடியினர் (**ST**)-35 வயதுக்குள் இருக்க வேண்டும்.

மேற்கண்ட 3 பணியிடங்களுக்கு பொதுப்பிரிவு (**GT**) -1, ஆதிதிராவிடர் (முன்னுரிமை அடிப்படையில் அருந்ததியினர்) (**SCA**) -1, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (**MBC & DNC**) -1 எனும் இனசுழற்சி அடிப்படையில் நிரப்பப்படும். விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை உரிய சான்றிதழ் நகல்களுடன் நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு பதிவு தபால் மூலம் 13.01.2021 அன்று மாலை 5.45 க்குள் கிடைக்குமாறு அனுப்பப்படவேண்டும். தாமதமாக பெறப்படும் மனுக்கள் பரிசீலனை செய்யப்படமாட்டாது. விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியுடையவர்களை நேர்முகத் தேர்வுக்கு வருமாறு பின்னர் தனியே அழைப்பாணை அனுப்பப்படும் என நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப.. அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்